செ.வெ.எண்: 31/ 2020 நாள்: 27.04.2020

# திருப்பூர் மாவட்டம்

## பொங்கலூர் ஒன்றிய பகுதிகளில் பயன்படுத்தப்படவுள்ள கிருமி நாசினி தெளிப்பு இயந்திரத்தினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் ஊராட்சி வளாகத்தில், கிருமி நாசினி தெளிப்பு இயந்திரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை.கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று (27.04.2020) பார்வையிட்டு தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையினை மாவட்டத்தில் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள அறிவுரைகளை பொதுமக்கள் முழுமையாக கடைபிடிக்க வேண்டும். பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய தேவைகளும் கிடைத்திட மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், சுகாதாரத்தை காக்கும் வகையில் கிருமி நாசினிகள் தெளிப்பதற்கும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் பயன்படுத்துவதற்காக அதிநவீன கிருமி நாசினி விசை தெளிப்பான் கடந்த (16.04.2020) முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட உடுமலைப்பேட்டை, குடிமங்கலம், பல்லடம், பொங்கலூர், மூலனூர், அவிநாசி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட ஊரக பகுதிகளில் கிருமி நாசினி தெளிப்பதற்காக ரூ.11.89 இலட்சம் மதிப்பில் நவீன இயந்திரம் வாங்கப்பட்டு இன்று (27.04.2020) முதல் கிராம பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க உள்ளார்கள். எனவே, பொதுமக்கள் எந்த வித அச்சமுமின்றி சமூக இடைவெளியினை கடைபிடித்து மாவட்ட நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு உகாயனூர் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.பழனிச்சாமி அவர்கள் ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.உடுமலை.கே.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கரைப்புதூர் ஏ.நடராஜன், முன்னாள் அமைச்சர் திரு.எம்.எஸ்.எம். ஆனந்தன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஜெ.ரூபன்சங்கர்ராஜ், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.குமார், துணைத்தலைவர் திருமதி.அபிராமி அசோகன், கேத்தனூர் ஊராட்சி தலைவர் திருமதி.சித்ரா ஹரி கோபால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**